பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4
11 12 2024 WEDNESDAY 6.30 PM

# மாநில செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

- மகாகவி சுப்பிரமணிய பாரதியின் வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான தொலைநோக்கு பார்வை இன்றளவும் அனைவருக்கும் உந்துசக்தியாக உள்ளது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

- பாரதி கலாச்சார மையங்களை பல்வேறு நாடுகளில் பிரதமர் ஏற்படுத்தி வருவதாக மத்திய இணையமைச்சர் திரு எல். முருகன் தெரிவித்துள்ளார்.

- உலத்தரம் வாய்ந்த சுகாதார நிபுணர்களை உருவாக்குவதை உறுதி செய்யும் நோக்கில் மருத்துவக்கல்வி மேலாண்மை அமைப்பு ஏற்படுத்தப்பட உள்ளதாக தமிழக அரசு கூறியுள்ளது.

- வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி அடுத்த 24 மணிநேரத்தில் இலங்கை – தமிழக கடற்கரையோரப் பகுதிகளை நோக்கி நகரக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

- உலக ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியின் ஆடவர் மற்றும் மகளிர் பிரிவில் இந்தியா காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

---- இனி விரிவான செய்திகள் ----

<<<<<<>>>>>>

மகாகவி சுப்பிரமணிய பாரதியின் வளர்ச்சியடைந்த இந்தியாவிற்கான தொலைநோக்கு பார்வை இன்றளவும் அனைவருக்கும் உந்துசக்தியாக உள்ளது என்று பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.

மகாகவி பாரதியாரின் பிறந்த தினத்தை முன்னிட்டு, இன்று புதுதில்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அன்னாரது படைப்புகளின் தொகுப்பை வெளியிட்டு அவர் பேசினார்.

*(சவுண்ட் பைட் - பிரதமர் (தமிழ்) — 51 செகண்ட்ஸ்)*

இந்நிகழ்ச்சியில் பங்கேற்ற தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு எல். முருகன், பிரதமர் திரு நரேந்திர மோடி பல்வேறு நாடுகளில் பாரதி கலாச்சார மையங்களை ஏற்படுத்தி வருவதாக தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - முருகன் - 64 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>>

மாநில மருத்துவக்கல்வி மேலாண்மை அமைப்பு ஒன்று ஏற்படுத்தப்பட உள்ளதாக தமிழக அரசு அறிவித்துள்ளது.

87 லட்சம் ரூபாய் செலவில் இந்த அமைப்பு ஏற்படுத்தப்பட உள்ளதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

உலத்தரம் வாய்ந்த சுகாதார நிபுணர்களை உருவாக்குவதை உறுதி செய்யும் வகையில் இந்த அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

நாடு முழுவதும் ஸ்மார்ட் இந்தியா ஹேக்கத்தான் நிகழ்ச்சி இன்று தொடங்கியது.

இரண்டு நாட்கள் நடைபெறவுள்ள இந்த இறுதிச்சுற்றில் ஆயிரத்து 300-க்கும் மேற்பட்ட மாணவர் குழுக்கள் பங்கேற்றுள்ளன.

நாமக்கல் மாவட்டம் குமாரப்பாளையத்தில் நடைபெற்றுவரும் இந்த நிகழ்ச்சியில், நான்கு வகையான சிக்கல்களுக்கு தீர்வுகாணும் வகையில் மாணவர்கள் இந்த போட்டியில் பங்கேற்றுள்ளதாக கல்வியாளர் டாக்டர் பொம்மன்ன ராஜா எமது செய்தியாளரிடம் தெரிவித்தார்

*(சவுண்ட் பைட் - பொம்மன்ன ராஜா – 53 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>>

வளர்ச்சியடைந்த நாடாக இந்தியாவை உருவாக்குவதில் கிராமப்புற மேம்பாடு முக்கிய பங்கு வகிப்பதாக குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு கூறியுள்ளார்.

இன்று புதுதில்லியில் தேசிய பஞ்சாயத்து விருதுகளை வழங்கி அவர் பேசினார்.

நாட்டின் 64 சதவீத மக்கள் ஊரகப்பகுதிகளில் வசிப்பதை அவர் சுட்டிக்காட்டினார்.

இந்த நிகழ்ச்சியில் 45 விருதுகளை குடியரசுத் தலைவர் வழங்கினார்.

<<<<<<>>>>>>

வங்கக்கடலில் நிலை கொண்டுள்ள ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதி அடுத்த 24 மணிநேரத்தில் இலங்கை – தமிழக கடற்கரையோரப் பகுதிகளை நோக்கி நகரக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசிய அவர், இதன் காரணமாக கடலோர மாவட்டங்களுக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் கனமழைக்கு வாய்ப்புள்ளதாக தெரிவித்தார்.

*(சவுண்ட் பைட் - செந்தாமரை கண்ணன் (1)- 59 செகண்ட்ஸ்)*

<<<<<<>>>>>>

*மாவட்டச்செய்திகள்*

கன்னியாகுமரி திருவள்ளுவர் சிலை முதல் விவேகானந்தர் பாறை வரை சுற்றுலாப்பயணிகள் நடந்து செல்லும் வகையில் அமைக்கப்பட்டு வரும் கண்ணாடி இழை கூண்டு பாலத்தினை 16-ஆவது நிதி ஆணையத்தின் தலைவர் திரு அரவிந்த் பனகாரியா மற்றும் ஆட்சியர் திருமதி அழகுமீனா இன்று ஆய்வு செய்தனர்.

--------------

பெரம்பலூர் மாவட்டத்தில் மழை முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பான அனைத்துத்துறை அலுவலர்களுடனான ஆய்வுக்கூட்டம் ஆட்சியர் திருமதி கிரேஸ் பச்சாவ் முன்னிலையில் இன்று நடைபெற்றது.

-----------

காஞ்சிபுரம் மாவட்டம் எரையூர் கிராமத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஒரு கோடியே 14 லட்சம் ரூபாய் மதிப்பலான நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திருமதி கலைச்செல்வி மோகன் இன்று பயனாளிகளுக்கு வழங்கினார்.

--------------

ராணிப்பேட்டை மாவட்டத்தில் பயிர் மகசூல் போட்டிக்கு விவசாயிகள் விண்ணப்பிக்கலாம் என்று வேளாண் துறை இணை இயக்குனர் திரு அசோக்குமார் கேட்டுக்கொண்டுள்ளார்.

----------------------

திருப்பத்தூர் மாவட்டம் தும்பேரியில் இன்று நடைபெற்ற நிகழ்ச்சியில் மாநில அரசின் நலத்திட்ட உதவிகளை ஆட்சியர் திரு தர்பகராஜ் இன்று பயனாளிகளுக்கு வழங்கினார்.

---------

ரமேஸ்வரம் அருகே பாம்பன் கடல் பகுதியில் இரண்டு டன் எடையுள்ள திமிங்கலம் கரை ஒதுங்கியது.

-------------

சென்னை மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் பொதுவிநியோகத் திட்ட மக்கள் குறைதீர் முகாம் வரும் சனிக்கிழமை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

<<<<<<>>>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

உலக ஸ்குவாஷ் சாம்பியன் போட்டியின் ஆடவர் மற்றும் மகளிர் பிரிவில் இந்தியா காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

ஹாங்காங்கில் நடைபெற்றுவரும் இப்போட்டியின் காலிறுதிக்கு முந்தைய சுற்று ஆட்டத்தில் இந்தியா 2-1 என்ற ஆட்டக்கணக்கில் ஆடவர் பிரிவில் மலேசியாவையும், மகளிர் பிரிவில் ஆஸ்திரேலியாவையும் வென்றது.

-------------

ஒடிஷா மாஸ்டர்ஸ் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் Tasnim Mir காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு முதல் சுற்று ஆட்டத்தில் அவர், 21-11, 21-5 என்ற செட் கணக்கில் இத்தாலியின் Gianna Stiglich –ஐ வென்றார்.

Shreya Lele, Ira Sharma, Anmol Kharb ஆகியோர் மகளிர் ஒற்றையர் பிரிவிலும், Rutuparna Panda – Swetaparna Panda இணை மகளிர் இரட்டையர் பிரிவிலும், சதீஷ்குமார் கருணாகரன் -- Aadya Variyath இணையும், சாத்விக் ரெட்டி – வைஷ்ணவி இணையும் கலப்பு இரட்டையர் பிரிவுகளில் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளன.

<<<<<<END>>>>>>